### வாக்குமூலம்

### குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

### வழக்கு எண் : CC 1 of 2023

### வழக்கு சாட்சி – PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆசிர்கோவில்பிள்ளை | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | தங்கையா | தொழில் | : | கருவாடு வியாபாரம் |
| கிராமம் | : | நெருப்பெரச்சல் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04.10.2023.
(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை : நாள்: 04.10.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு கருவாடு வியாபாரம் செய்து வருகிறேன். 18.09.2022 ஆம் தேதி கோவை தொண்டாமுத்தூரில் உள்ள எனது மாமா மகன் அ.சா.1 கிப்சன்ஞானதுரைக்கு பெண் பார்ப்பதற்காக TN 39 BT 3607 என்ற எண்ணுள்ள ஆமினி காரில் எனது மாமா செல்வராஜ், அத்தை ராஜம்மாள், அகஸ்டின், எனது மனைவி அமிர்தசெல்வி, கிப்சன்ஞானதுரை ஆகிய 6 பேரும் பெண் பார்த்துவிட்டு வந்து திருப்பூர்–பொள்ளாச்சி ரோட்டில் பல்லடம் தாலுக்கா அலுவலகம் எதிரிர் புறத்தில் உள்ள படிக்கட்டில் உட்கார்ந்து நாங்கள் 6 பேரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாக வந்து நாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்தில் ஒரு பல்சர் வாகனத்தின் மீது மோதி, ஆமினி வேன் மீது மோதி, அருகில் உட்கார்ந்து இருந்த எனது மனைவி, அத்தை ஆகியோர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். அந்த விபத்தில் எனது மனைவி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். எனது அத்தைக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. எனது மாமா செல்வராஜ்க்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டு ஈச்சர் வாகனத்திற்கு அடியில் கிடந்தார். அவர்களை ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் எனது மனைவி, அத்தை இறந்துவிட்டதாக சொன்னார்கள். அங்கு சவகிடங்கில் பராமாரிப்பு வேலை நடந்து கொண்டிருந்ததால் திருப்பூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் எனது

மனைவி, அத்தை உடல் வைக்கப்பட்டது. எனது மாமா செல்வராஜ் கோவை KMCH மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். திருப்பூர் அரசு மருத்துவமனையில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வந்து பிரேத விசாரணை செய்தார்கள். நான் எனது மனைவியின் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கண்இமைக்கும் நேரத்தில் விபத்தை ஏற்படுத்தினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக போதிய வாய்ப்பு அளித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை : இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.10.04 19:50:38 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 1 of 2023

வழக்கு சாட்சி – PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வராஜ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ஞானமுத்து | தொழில் | : | மீன் வியாபாரம் |
| கிராமம் | : | தொண்டாமுத்தூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | கோவை | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04.10.2023.

(எதிரி ஆஜர்).

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணை : நாள்: 04.10.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு மீன் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். விபத்தில் இறந்துபோன ராஜம்மாள் எனது மனைவி ஆவார். விபத்தில் இறந்துபோன அமிர்தசெல்வி எனது மகள் ஆவார். கடந்த 18.09.2022 ஆம் தேதி எனக்கு மகனக்கு பெண் பார்ப்பதற்காக எனது அக்கா மகன் ஆசிர்கோவில்பிள்ளைக்கு சொந்தமான ஆமினி காரில் பல்லடம் வடுகபாளையத்திற்கு சென்று பெண் பார்த்துவிட்டு வந்து திருப்பூர்–பொள்ளாச்சி ரோட்டில் தாலுக்கா அலுவலகம் எதிரில் உள்ள ஜெராக்ஸ் கடை படிக்கட்டில் உட்கார்ந்து பெண் பார்த்தது சம்மந்தமாக நாங்கள் 6 பேரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஈச்சர் லாரி ஒன்று அதிவேகமாக வந்து எங்கள் மீது மோதியதில் கண்இமைக்கும் நேரத்தில் எங்கள் மீது மோதி நான் ஈச்சர்க்கு அடியில் உள்ள சக்கரத்தில் கிடந்தேன். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியை ஓட்டி வந்தவர் ஆவார். எனக்கு தலை, வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனக்கு மயக்கம் வந்துவிட்டது. எங்களை ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து அங்கிருந்து திருப்பூர் சென்று, திருப்பிரிலிருந்து கோவை KMCH மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். இந்த விபத்தில் எனது மனைவி மற்றும் எனது மகள் இரண்டு

பேரும் சம்பவத்தின்போது இறந்துவிட்டதாக என்னிடம் சொன்னார்கள். கோவை KMCH மருத்துவமனையில் 18.09.2022 ஆம் தேதி சிகிச்சையில் சேர்த்து 21.09.2022 ஆம் தேதி டிஜ்சார்ஸ் ஆனேன். என்னை 10.11.2022 ஆம் தேதி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விபத்து குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக போதிய வாய்ப்பு அளித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை : இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.10.04 19:50:43 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**வாக்குமூலம்**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**

**வழக்கு எண் : CC 1 of 2023**

**வழக்கு சாட்சி – PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கிப்சன்ஞானதுரை | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | IT வேலை |
| கிராமம் | : | தொண்டாமுத்தூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | கோவை | வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04.10.2023.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை தொடர்ச்சி: நாள்: 04.10.2023

1. ஆஜர் எதிரி தான் ஈச்சர் வாகனத்தை வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், தவறான திசையில் ஓட்டி வந்து எனது அம்மா, அத்தை ஆகியோர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக போதிய வாய்ப்பு அளித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை : இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.10.04 19:50:48 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.